சைதாப்பேட்டைக்கும், எங்களுடைய காஞ்சிபுரம் மாவட்டத்திற்கும் தொடர்பு இல்லாத பகுதியில், அந்த D.D. அலுவலகம் இயங்கிக் கொண்டிருக்கிறது. மையப் பகுதியான செங்கற்பட்டிலே வைத்தால் அங்கே இருக்கிற சித்தாமூர், லத்தூர், திருக்கழுக்குன்றம், காட்டாங்கொளத்தூர், திருப்போரூர், பரங்கிமலை, செங்கற்பட்டு, மதுராந்தகம், ஆலந்தூர், பல்லாவரம் போன்ற பகுதிகளுக்கு இது மையப் பகுதியாக இருக்கிற காரணத்தினாலே, அந்த D.D. Health அலுவலகம், செங்கற்பட்டுக்கு மாற்றப்படுமா என்ற கேள்வியையும் இங்கே விடுத்து, எனக்கு உரிய வாய்ப்பினைக் கொடுத்த நம்முடைய பேரவைத் தலைவர் அவர்களுக்கு மீண்டும் ஒருமுறை நன்றிகூறி, விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

6. விதி 110-ன்கீழ் முதலமைச்சரின் அறிக்கைகள்

(அ) குழந்தையின் பெயருக்கு முன்னால் தாய்/தந்தை பெயர் முதல் எழுத்தை (Initial) பயன்படுத்துவது பற்றி வெளியிடப்பட்ட ஆணை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *110-வது விதியின்கீழ், இரண்டு அறிக்கைகளை அளிக்க, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அனுமதி கோரியிருக்கிறார்கள். அனுமதி அளிக்கப்படுகிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.*

***மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதல் அறிக்கையை இப்போது அளிக்கிறேன்:

25-4-2003 அன்று, சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறையின் மானியக் கோரிக்கை மீதான விவாதத்தின்போது, குழந்தைகளின் பெயருக்கு முன்னால், தாயின் பெயரை முதல் எழுத்தாக வைத்துக்கொள்வது பற்றி விவாதிக்கப்பட்டது. அப்போது, மாண்புமிகு சட்டப் பேரவை உறுப்பினர் திருமதி காசாம்பு பூமாலை அவர்கள், தனது கட்சித் தலைவரான டாக்டர் ராமதாஸ் அவர்கள்தான், தந்தையின் பெயருக்குப் பதிலாக, தாயின் பெயரை முதலில் போட்டுக் கொள்ள வேண்டுமென்ற ஒரு கருத்தை உலகிற்கே அறிமுகப்படுத்தியதாகக் குறிப்பிட்டார். மேலும் மாண்புமிகு சட்டப் பேரவை உறுப்பினர் திரு. ராஜா அவர்கள் சட்டமன்றத்தில் பேசுகின்றபோது, அண்மையில் குஜராத் மாநில அரசு, தந்தை பெயரின் முதல் எழுத்துக்குப் பதிலாக, தாயின் பெயரின் முதல் எழுத்தை ஒருவர்

தன்னுடைய பெயரோடு சேர்த்துப் போட்டுக்கொள்ளலாம் என்ற அரசாணையை வெளியிட்டிருப்பதாகத் தெரிவித்தார்.

இவ்வாறு பலர் இந்தக் கருத்துக்கு முன்னுரிமை கோரினாலும், உண்மையில், 1994 ஆம் ஆண்டிலேயே நான் இத்தகைய ஓர் ஆணையை வெளியிட்டிருக்கிறேன் என்பதை அப்போது தெரிவித்தேன்.

1993-1994 ஆம் ஆண்டில், சட்டப் பேரவையில், கல்வி மானியக் கோரிக்கை மீதான விவாதம் நடைபெற்றுக் கொண்டிருந்தபோது, சில உறுப்பினர்களின் வேண்டுகோளை ஏற்று, கல்வி, அறிவியல் மற்றும் தொழில்நுட்பவியல் துறையின், 28-3-1994 நாளிட்ட அரசாணை நிலை எண் 246-ன் மூலம், தந்தை இல்லாதிருக்கும்பட்சத்தில், குழந்தையின் பெயருக்கு முன்னால், தாயின் பெயரில் உள்ள முதல் எழுத்தைப் போட்டுக்கொள்ள ஆணையிடப்பட்டது என்பதை நான் தெளிவுபடுத்தினேன்.

இந்திய நாட்டிற்கே முன்னோடியாக, தமிழகத்தில்தான், அதுவும் எனது தலைமையில் அமைந்த அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசுதான் (மேசையைத் தட்டும் ஒலி) குழந்தைகளைப் பள்ளியில் சேர்க்கும்போது, தாயின் பெயரில் உள்ள முதல் எழுத்தை initial-ஆகப் பயன்படுத்தலாம் என்று ஆணையிட்டது என்று தெரிவித்தேன். அப்போது, மாண்புமிகு சட்டப் பேரவை உறுப்பினர் திரு. ஜி.கே. மணி அவர்களின் கோரிக்கையையும் ஏற்று, மேலும் ஓர் அறிவிப்பினை வெளியிட்டேன். அதாவது, “இனிமேல் குழந்தைகளைப் பள்ளிகளில் சேர்க்கும்போது, அவர்கள் விரும்பினால், முதலில் தாயின் பெயரையும், பின்னர் தந்தையின் பெயரையும் குறிப்பிட்டு, அவர்கள் அந்தப் படிவங்களைப் பூர்த்தி செய்யலாம். சில குடும்பங்களில் தாயின் பெயரை மட்டும் போட்டுக்கொள்ள விரும்பினால், அதையும் செய்யலாம். சில குடும்பங்களில் தந்தையின் பெயரை மட்டும் போட்டுக் கொள்ள விரும்பினால், அதையும் செய்யலாம்” என்று கூறியிருந்தேன். இந்த அறிவிப்பின் அடிப்படையில், தேவையான அரசு ஆணையை உடன் வெளியிடுமாறு கல்வித் துறைக்கு ஆணையிட்டேன்.

பள்ளிக் கல்வித் துறை, 28-4-2003 அன்று, அரசாணை (நிலை) எண் 60-ன்படி, இதற்கான ஆணை ஒன்றை வெளியிட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்வதில் நான் மட்டற்ற மகிழ்ச்சியடைகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அந்த ஆணைப்படி, ஒரு குழந்தையைப் பள்ளியில் சேர்க்கும்போது, அக்குழந்தையின்

பெற்றோர்களின் விருப்பப்படி, குழந்தையின் பெயருக்கு முன் தாயின் பெயரில் உள்ள எழுத்தையும் அதனையடுத்து தந்தையின் பெயரில் உள்ள முதல் எழுத்தையும், தலைப்பெழுத்தாக, Initial-ஆகப் பயன்படுத்தலாம். அல்லது தாயின் பெயரில் உள்ள முதலெழுத்தை மட்டும் தலைப்பெழுத்தாக, Initial-ஆகப் பயன்படுத்தலாம். அல்லது தந்தையின் பெயரில் உள்ள முதலெழுத்தை மட்டும் தலைப்பெழுத்தாக, Initial-ஆகப் பயன்படுத்தலாம்.

முற்பகல் 11-25

இதனை, அனைத்துவகைப் பள்ளிகளிலும், பள்ளிச் சேர்க்கை விண்ணப்பப் படிவத்தில் அதாவது, School Admission Application Form-ல் உரிய இடத்தில் சேர்த்து, தவறாது கடைப்பிடிக்க வேண்டும் என்று அரசு ஆணையிட்டுள்ளது.

எனவே பெண்ணுரிமையை நிலைநாட்டுகின்ற வகையிலும், பெண்ணுக்குச் சிறப்பு சேர்க்கின்ற வகையிலும் உள்ளதொரு ஆணையை அன்று கொண்டுவந்ததும் நான்தான்; அதனை விரிவுபடுத்தி இன்று கொண்டு வந்திருப்பதும் நான்தான் (மேசையைத் தட்டும் ஒலி) என்ற பேருண்மையை இந்த மாமன்றத்தில் தெள்ளத் தெளிவாக நான் குறிப்பிட்டுக்கொள்கிறேன்.

ஒரு சமுக மறுமலர்ச்சிக்கு வித்திடுகின்ற திருநாளாக இந்த நாள் வரலாற்றில் குறிக்கப்படும் என்பதை இந்த மாமன்றத்தின் மூலமாக மக்கள் அனைவருக்கும் தெரிவித்துக்கொள்வதில் நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

(ஆ) Citizen என்ற ஆங்கிலச் சொல்லுக்கு, பெண்பால் தமிழ்ச் சொல்லாக குடிமகள் என்ற சொல்லைப் பயன்படுத்துதல்

மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா: இரண்டாவது அறிக்கை. மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, *25-4-2003* அன்று, சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறையின் மானியக் கோரிக்கைமீதான விவாதத்தின்போது, பெண்களுக்குச் சம உரிமை வழங்குவது பற்றியும் விவாதிக்கப்பட்டது. அப்போது இதைப்பற்றி என்னுடைய நிலைப்பாடு ஒன்றினை நான் தெரிவித்தேன். அதாவது, 'தமிழ் மொழியில் அரசமைப்புச் சட்டத்திலேயே, பெண்களுக்கு ஒரு பெரிய அநீதி